<u>வாக்குமூலம்</u>

<u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>

<u>வழக்கு எண் : SC.No. 517/2025</u>

<u>வழக்கு சாட்சி PW-4</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சுடலைமணி | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | இசக்கி | தொழில் | : | காவல் ஆய்வாளர் (ஓய்வு) |
| கிராமம் | : | திருவள்ளூர் | வயது | : | 66 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on Tuesday of 02.06.2026.

**(எதிரிகள் ஆஜரில்லை. கு.வி.மு.ச.317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை. சாட்சி காணொளி மூலம் ஆஜரானார்.)**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் தற்போது தமிழ்நாடு காவல்துறையில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்று திருவள்ளூர் மாவட்டத்தில் குடியிருந்து வருகிறேன். நான் வாசுதேவநல்லூர் காவல் நிலையத்தில் ஆய்வாளராக பணியில் இருந்தபோது, 28.10.2014ம் தேதி, 16.00 மணிக்கு சரவணமுருகன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவைப் பெற்று, அதன் தன்மைப்படி காவல் நிலைய குற்றஎண்..288/2014, சட்டப்பிரிவுகள் 147, 430, 353 IPC and Sec 3 of TNPPDL Act-ன் படி முதல் தகவல்அறிக்கை பதிவு செய்து, அதன் அசலை சிவகிரி நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கும், இதர நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தேன். புகார் மனு **அ.சா.ஆ.2** ஆகும். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.3** ஆகும்.

பின்னர் இந்த வழக்கை நான் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு, அதே தேதி, 17.00 மணியளவில் வழக்கின் சம்பவயிடம் சென்று சாட்சிகள் சதாம் மற்றும் கனகராஜ் ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு, ஒரு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்தேன். அந்த பார்வை மகஜர் **அ.சா.ஆ.4** ஆகும். வரைபடம் **அ.சா.ஆ.5** ஆகும். பின்னர், சாட்சிகள் சரவணமுருகன், அந்தோணிராஜ், சுப்பிரமணியராஜா, குருசாமி, சதாம், கனகராஜ் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

பின்னர், எதிரிகள் நீதிமன்ற பிணையில் சென்றுள்ளார்கள். அதனால் அவர்கள் கைது செய்யப்படவில்லை. பின்னர், 26.06.2015 ம் தேதி, சட்டப்பிரிவு 147 இதசவினை நீக்கி சட்டமாறுதல்அறிக்கை தயார் செய்தேன். அந்த சட்டமாறுதல் அறிக்கை அ.சா.ஆ.6 ஆகும். பின்னர், 26.06.2015 ம் தேதி, எதிரிகள் மீது சட்டப்பிரிவுகள் 430, 353 இதச மற்றும் Sec 3 of TNPPDL Act வின் படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :</u>

முதல்தகவல்அறிக்கை பதிவு செய்வதில் ஏற்பட்ட கால தாமதத்திற்கான காரணம் எனக்கு தெரியாது. நான் வன அலுவலர்களை விசாரித்தேனா? என்றால் விசாரித்தேன். நான் சேதமதிப்பு சான்று பெறவில்லை என்றால் சரிதான்.

நான் சொன்ன நாள், நேரத்தில் புகார்தாரிடம் இருந்து புகார் எதுவும் பெறவில்லை என்றால் சரியல்ல. நான் சொன்ன நாள், நேரத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் சொன்ன நாள், நேரத்தில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்யவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட

சான்றுபொருட்களுக்கும், எதிரிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கை சரிவர புலன் விசாரணை செய்யாமல் எதிரிக்கு எதிராக தவறுதலாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u> –**

இல்லை.

சாட்சி சென்னை காவல் இணை ஆணையர், கிழக்கு மண்டலம், சென்னை பெருநகரம், எழும்பூர், சென்னை 8 அலுவலக காணொளி அறையில் இருந்து காணொளி மூலம் ஆஜரானார். அவரது வாக்குமூலம் Thiru. Aathilingam, Technical Sub Inspector of Police, Video conference Co-ordinator சென்னை காவல் இணை ஆணையர், கிழக்கு மண்டலம், சென்னை பெருநகரம், எழும்பூர், சென்னை 8 அலுவலகம் என்பவர் முன்னிலையில் ஒருங்கிணைக்கப்பட்டு, இந்த திறந்த நீதிமன்றத்தில் பெஞ்ச் கிளார்க் அவர்களால் பிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.06.16 11:00:00 +0530